வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 140 of 2021

வழக்கு சாட்சி - PW 13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அர்ஜூனன் | தொழில் | : | உதவி காவல் ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : | பழனியப்பன் | வயது | : | |
| கிராமம் | : | காங்கேயம் காவல் நிலையம் | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026.

( எதிரி ஆஜர்).

**முதல்விசாரணை :** **நாள் : 27.01.2026.**

1) நான் தற்போது உதவி காவல் ஆய்வாளராக காங்கேயம் காவல் நிலையத்தில் பணிபுரிந்துவருகிறேன். கடந்த 20.09.2020 ஆம் தேதி காலை 8.30 மணிக்கு அவிநாசிபாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலையப்பொறுப்பு அலுவலில் இருந்தபோது ரங்கம்பாளையம் செந்தில் நகரை சேர்ந்த லிங்கசாமி மகன் முத்துசிவாஎன்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று அவிநாசிபாளையம் காவல் நிலைய குற்ற எண்.1284/2020 சட்டப்பிரிவுகள் 279,337,304(A)( 2 Counts) இதச -வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6** ஆகும். அசல் முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரினை இனைத்து கனம் நீதிமன்ற நடுவருக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். பின்னர் சிகிச்சைக்காக அவழக்கில் காயம்பட்ட மிர்சினி என்பவர் இறந்து விட்டதாக கிடைக்கப்பெற்ற தகவலினை பெற்று காவல் ஆய்வாளர் உத்தரவின் படி இறந்துபோன

பிரேதத்தின் மீது 20.09.2020 ஆம்தேதி 13.30 மணி முதல் 15.30 மணி வரை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத பிரசோதனைக்காக ஆஜர்படுத்துவதற்காக பெண் காவலர் 1606 சாவித்திரி என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ. 7** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

1) என் வசம் எழுத்துமூலமான புகார் 8.30 மணிக்கு தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 8.30 மணிக்கு பெறப்பட்ட புகார் பெறப்பட்டு எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் ½ மணி நேரத்தில் பதிவு செய்யப்பட்டது. அன்றைய தினம் காவல் நிலையத்திற்கு காமநாயக்கன்பாளையம் காவல் நிலைய ஆய்வாளர் திரு. ராஜேஷ்கண்ணன் என்பவர் பொறுப்பு நிலைய அதிகாரியாக இருந்தார் என்றால் சரிதான்.

**பொதுவான கேள்வி.**(பதிவு செய்யப்படும் முதல் தகவல் அறிக்கை காலதாமதம் இன்றி நீதிமன்றத்திற்கு அனுப்படவேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான்.)

இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 20.09.2020 ஆம் தேதி இரவு 9.20 மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கு விஷேஷ காரணங்கள் எதுவும் குறிப்பிட்டு முதல் தகவல்்அறிக்கை அனுப்படவில்லை என்றால் அன்றைய தினமே கொடுக்கப்பட்டுள்ளது.புகாரில் அ.சா.1 முத்து சுப்பிரமணியத்திற்கு முத்து சிவாவின் எந்த செல்போனில் இருந்த எந்த செல்போன் நம்பருக்கு தகவல் சொன்னால் என்றால் சரிதான். புகாரில் தனக்கு தகவல் சொன்னதாக சொல்லப்படும் சுப்பிரமணியம் என்பவரின் தகப்பனார் பெயர் மற்றும் வீட்டு முகவரி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) புகாரில் விபத்தில் இறந்து போன நபர்கள் தலைகவசம் அணிந்திருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு சம்மந்தமாக திருப்பூர் அரசு மருத்துவமனை பதிவேட்டை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிடவி்ல்லை. இவ்வழக்கில் எழுத்து

மூலமான புகார் பெறப்படுவதற்கு முன்பாகவே அவிநாசிபாளையம் காவல்நிலையத்திற்கு தகவல் பெறப்பட்டு காவலர்கள் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டார்கள் என்றால் சம்பவம் நடந்த இடம் பிரதான சாலையான திருப்பூர் -காங்கேயம்  ரெங்கம்பாயைம் இடம் நான் காவல் நிலையத்தில் இருந்தபோதுதான் தகவல் கிடைத்ததது உடனடியாக காவலர்கள் சென்றார்கள்.

3) விபத்து நடந்த இடத்திற்கு சென்ற போலீசார் அப்போதே அங்கிருந்த ஊர்காரர்களிடம் விபத்து குறித்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்போது அங்கிருந்த ஊர்காரர்கள் விபத்தில் இறந்துபோன சிறுவன் தன் தாய் மற்றும் தங்கை ஆகியோரை இருசக்கர வாகனத்தில் உட்காரை வைத்து திருப்பூரில் இருந்து காங்கேயம் செல்லும் சாலையில் மேற்ககில் இருந்து கிழக்கு நோக்கி சென்றார் என்றும் அப்போது பின்னால் கார் வருவதை கவனிக்காமல் ரோட்டை கடக்க முயற்சித்போது தான் விபத்து ஏற்பட்டது என்றும் சொன்னார்கள் என்றும் அந்த விபரங்களை மறைத்து பொய்யான முதல் தகவல் அறிக்கையை என்னால் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன நபர்களுக்கு இழப்பீடு பெற்று தர வேண்டி பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காரணத்தினால் தான் சுமார் 12.00 மணிநேரம் தாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படுள்ளது என்று சொன்னால்ீ சரியல்ல. நான் முதல் தகவல் அறக்கையில் சொன்னது போல் விபத்து நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ய சொல்லி எழுத்து மூலமான உத்தரவு எதுவும் பிறப்பித்தாரா என்றால் வாய் மொழியாக கூறினார்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.01.27 16:50:40 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.